தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் நலமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சட்டத்தை திருத்தினால்தான் அதைச் செய்ய முடியும். ஆகவே இப்போதைக்கு நான் இதுபற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி: தலைவர் அவர்களே, இது போன்ற மரங்கள் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். அந்தக் குழு மட்டும் பரிசீலனை செய்து கட்டிங் பெர்மிட்டுகள் கொடுக்கின்றபோது சில தவறுகள் நடந்து விடுகின்றன. அந்தக் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்றபோது காய்ந்து விழக் கூடிய மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்று அந்தக் குழு உத்தரவிடும்போது இடையிலே சிலர் கட்டிங் பெர்மிட் எடுக்கின்றவர்கள் தவறான வழியில் பச்சை மரங்களை வெட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் அந்தப் பணி சிறப்பாக நடக்கும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுபற்றி சட்ட திருத்தம் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இதில் சாதகமும் இருக்கிறது, பாதகமும் இருக்கிறது. ஆகவே இப்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றுதல்

*2640 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1990 சனவரி 23]

(ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றம் செய்ய நகராட்சிகளின் கையேடு விதி 12(3)-ன்படி நகரியக் குழுவின் அனுமதியும், அரசின் அனுமதியும் பெற்றிட கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே சுற்றுலாத் துறைக்கு திருக்குற்றாலத்திலே ஒரு உணவகம் இருக்கிறது. அது சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது. சுற்றுலாத் துறைக்குத் தங்கும் அறைகள் இருந்தால் அது மேலும் சிறப்பாக இயங்கும் என்று உணவகத்திலே பணி புரிகின்றவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, மிக விரைவாக திருக்குற்றாலத்திலே சுற்றுலா துறைக்குச் சொந்தமாக தங்கும் அறைகளை ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, இந்த அருவி இல்லம் சுற்றுலாத்துறை கொடுத்த மானியத்தைக் கொண்டு, நகரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டது. ஆகவே 75 படுக்கை அறைகள் கொண்ட இந்த விடுதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றிட எண்ணியபோது இரண்டு சிக்கல்கள் அங்கே ஏற்பட்டன. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் அந்த இடம் நகரியத்திற்குச் சொந்தமான இடம் அல்ல, திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இடம் என்று அந்த ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்ட நீதி மன்றத்திலே அது வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அடுத்தது நகரியம் இந்த விடுதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றித்தர வேண்டுமானால் அந்த நகரியத்திலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அந்த நகரியம் இப்பொழுது முழுமையாக இல்லை. ஆகவே அதிலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விடுதியைத் தவிர இன்னும் ஒரு ''ஹோட்டல் தமிழ்நாடு'' கட்டுவதற்காக இன்னொரு இடத்தையும் நாங்கள் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினா நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தகராறு உள்ள நகரியத்திற்குச் சொந்தமான அந்த இடத்தைக் கையகப்படுத்துவது என்றால் அது காலதாமதம் ஏற்பட ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே, அதே திருக்குற்றாலத்தில்

வேறு பல இடங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த சுற்றுலாத் துறை கையகப்படுத்தி, தங்கும் அறைகள் ஏற்படுத்து கின்ற எண்ணம் உண்டா? ஏனென்றால், இன்றையதினம் திருக்குற்றாலம் இலட்சக்கணக்கான மக்கள் வந்து போகின்ற ஒரு முக்கியமான—நடுத்தர மக்கள் ஆதரிக்கின்ற—சுகவாசஸ்தல மாக இருக்கின்றது. தங்கும் அறைகள் அவ்வளவு வசதியாக இல்லாத காரணத்தால் வருகின்றவர்கள் எல்லாம் சுற்றுலா துறைக்கு உரிய அறைகள் அங்கே இருக்கின்றனவா என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்ற, சுற்றுலாத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற தங்கும் அறை களை மிக விரைவிலே ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் கீழ் இயங்குகின்ற ஹோட்டல்களுக்கு இருக் கின்ற மரியாதையை, வரவேற்பை நான் இங்கே கேட்டு உள்ள படியே மகிழ்ச்சி அடைகின்றேன். போன ஆண்டு குற்றாலத் திற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் சென்றபோதும் இதே கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து மிகத் தீவிரமாக அங்கே நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்பாடு நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 561 மற்றும் 3715 ஆகியவை சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு மின்துறை அமைச்சர் சேர்த்தே பதில் சொல்லலாம்.

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள்.

*வினா எண். 561 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தைக் கைவிட்டு விவ சாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கூடங்குளத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைக்கும்திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் தேவைப்படுவதாக பம்பாய் அணுசக்தித் துறை கேட்டுள்ளது. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு அமைப்பின்கீழ் உள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடர்ந்து வினாடிக்கு